# மரணத்தை வென்று நிற்கும் கேதீஸ்…



இலங்கையில் தினசரி நிகழ்வுகளின் சாதாரண செய்தியாகிவிட்ட படுகொலைச் செய்திகளில் ஒன்றாக, அதுவும் இப்போது ஆரம்பித்துள்ள யுத்த நிலவரத்தில் இரு தரப்பும் அறிக்கையிடும் நூற்றுக்கணக்கான கொலைச் செய்திகளுக்கு மத்தியில், ஆரவாரமின்றிக் கொல்லப்பட்ட இந்தச் சிந்தனையாளனை உய்த்தறிந்து இச் சம்பவத்தின் பாரதூரத்தைப் புரிந்துகொள்ளமுடியாத உணர்வற்ற உயிர்ப்பிழந்த சமூகமாக்கப்பட்டுவிட்ட ஒரு பரிதாபகரச் சமூகத்தின் முன்னிலையில்,

அதே பரிதாப நிலையை மாற்றுவதற்காக உணர்வுடன் உழைத்த இந்தச் சிந்தனையாளன் பரிதாபகரமாகக் கொல்லப்பட்டான்!

மரணங்களைக் கண்டு, மறுபக்கம்கூடத் திரும்பிக்கொள்ளும் உறுத்தலின்றிக் கடந்து செல்லப் பழகிப்போய்விட்ட எம் சமூகத்தின் சடத்துவக் கண்களுக்குத் தென்படாதே போய்விடக்கூடிய இந்தக் கொலைகளின் விழைவுகள்பற்றி என்னதான் அச்சமோ தெரியாது, கொலைஞர்களின் ஊதுகுழல்கள் தாமாகவே இச் செய்திகளைப் பூதாகரப்படுத்தி, தமது சித்திரிப்புக்களையும் வசைகளையும் பொழிந்து, பொதுசனம் தப்பித் தவறிக்கூடத் தன் சுயபுத்தியால் சொந்தக் கணிப்பீடுகளைச் செய்துகொள்ளக் கூடாதென்ற பிரயத்தனத்தில் இறங்கிவிடுகின்றன.

கேதீஸ் கொல்லப்பட்ட உடனடியாகவே "நிதர்சனம் டொட் கொம்" இணையத்தளம் எழுதிவிட்டது, துரோகி கொல்லப்பட்டான்!

இன்று, எம் சமூகத்தில் மிக மலிந்த பட்டமாகிவிட்ட,- புலிகளுக்குச் சார்பாக மரணிக்காத எவருக்குமே சுலபமாக வழங்கிவிடக்கூடிய பட்டமாக ஆகிவிட்ட, - இத் 'துரோகி' பட்டம் கேதீஸ் கொல்லப்படுமுன்னரே, இவ்விணையத் தளத்தின் நினைவு அடுக்குகளில் அவருக்காகச் சுடச்சுடத் தயாரித்து வைக்கப்பட்டிருந்தது.

இந்த அவதூறை, சராசரிக்கும் மிகக் கீழான புத்தி மட்டத்தில் உழலும் காட்டுமிராண்டித் தரச் சிந்தையை மட்டுமே வாய்க்கப்பெற்ற ஒருவன், கணனியின் முன் குந்தியிருந்து தன் விரல்களால் சில கணங்களுக்குள் பொறித்துவிட, பல சகாப்த வரலாறுகொண்ட ஒரு சமூகச் சிந்தனையாளனின் செயற்பாடுகளெல்லாம் கேள்வியின்றி நிராகரிக்கப்பட்டு, அவன்பற்றிய ஒரு அகோரத் தோற்றப்பாடு சமூகத்தின்முன் காட்சிப்படுத்தப்பட்டு விடுகிறது.

இப்படியாக எந்தப் பெறுமதிமிக்க மனிதனின் உயிரையும் நினைத்த மாத்திரத்தில் பிடுங்கி, சுத்தத் துரோகி என முத்திரை குத்தி இழிவுபடுத்திச் சித்திரித்து உலகெங்கும் காட்டக்கூடிய நியதிகளற்ற ஊடக அராஜகம் கோலோச்சும் நாட்களில் வீழ்ந்துபோன இந்த விருட்சத்துக்காக, அன்று பாரதி எழுதிய ஒரு நம்பிக்கை வாசகத்தைத்தை நாம் சொல்லிக் கொள்வோம். " தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும், ஆனால் தர்மம் மறுபடி வெல்லும்!

ஓரிரு வருடங்களுக்கு முன் கேதீஸின் வீட்டுக்கு சில இளைஞர்கள் தேடிச் சென்றனர். தம்மைப் புலிகள் என்று அடையாளப்படுத்திக்கொண்டு அவர்கள் கேதீஸிடம் அவரது எழுத்துக்கள் பற்றி எச்சரிக்கை விடுத்தனர். அவர்களிடம் கேதீஸ் சிரித்தபடியும் நிதானமாகவும் கூறி அனுப்பிய விடயம் இதுதான். "நான் எனது மனசாட்சிக்கு எது சரி என்று நினைக்கிறேனோ அதைத்தான் செய்வேன். எதன்நிமித்தமும் நான் மனசாட்சிக்கு விரோதமாக நடக்க மாட்டேன். நான் எல்லாத் தரப்பையும் பாரபட்சமற்ற முறையில்தான் பார்க்கிறேன். இப்படியேதான் நான் இருப்பேன். என்னை மிரட்டுவதன் மூலம் நிறுத்த முடியாது. உங்கள் தலைவருக்கு என்னைப்பற்றி மிக நன்றாகத் தெரியும்."

அவர் கூறியது முற்றிலும் உண்மை. அவர் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் பேச்சாளராக இந்தியாவில் செயற்பட்ட வேளை, விடுதலை இயங்கங்களின் ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கப்பட்டிருந்த காலத்தில் அவருடன் பலதடவைகள் கலந்துரையாடிய புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அவரின் நேர்மையும், அஞ்சாமையும், கொள்கைப்பற்றும், அர்ப்பண உணர்வும், செயல் திறனும், திண்யமான அறிவுச் சுடரும் மிக நன்றாகவே தெரியும். திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது, இப்போதுகூட அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் திம்புக் கோட்பாடுகளை வடிவமைத்த வரலாற்றுப் பங்களிப்பில் முன்னிலைப் பாத்திரம் வகித்தவர் அவர். வீடுவந்து பேசி, தேனீர் அருந்திவிட்டு அமிர்தலிங்கத்தையும் மற்றைய தமிழர் கூட்டணித் தலைவர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டுச் சென்ற புலிகளின் செய்கையை நன்கறிந்தும், அதே பாணியில் தனது வீட்டுக்கு வந்து பேசிய புலிகளிடம் இப்படி நிதானமான முகத்துடன் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியனுப்பக்கூடிய நெஞ்சழுத்தம் மிக்க அசாத்திய வீரம் அந்த மெல்லிய உருவம் கொண்ட மனிதரிடம் இருந்தது. அது அவரின் ஓங்கிநிற்கும் அறிவுச் சுடரின் தீட்சண்யத்திலிருந்து பிறந்திருந்தது. அவர் கொழும்பில் தெஹிவளையிலமைந்த தன் வீட்டில் தன் மனைவியுடன் எதுவித பாதுகாப்புமின்றி மிகச் சாதாரணமாகவே வாழ்ந்து வந்தார்.

அவர்கள் வந்து எச்சரித்ததையிட்டுத்தன்னும் தனக்கான சிறு அளவிலான பாதுகாப்பைக்கூட அவர் தேடிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் அவர்கள் இரண்டாம்தரமும் வந்து எச்சரித்தார்கள். குறைந்த பட்சம் ஒரு காவற்காரரைத் தன்னும் நியமிக்க அவருக்குத் தோன்றவில்லை. அதற்கு வசதியில்லாமலல்ல. ஆனால் தான் செய்யும் பணி புனிதமானதென்ற எண்ணமும் தான் ஒரு முழுமையான ஜனநாயகவாதி என்ற நம்பிகையும் அவருக்கு பாதுகாப்பு பற்றிய எந்தக் கரிசனையையும் ஏற்படுத்தவில்லை.

அவர்கள் மூன்றாம் தரமும் வந்தார்கள். இந்தத் தடவை அவர்கள் அவரை உயிரோடு விட்டு வைக்க வில்லை.

புலிகளின் தலைவர் பிரபாகரன் அடிக்கடி சொல்லும் ஒரு வார்த்தை என்னவென்றால், "இந்தப் படிச்சவங்களையெல்லாம் காசுக்கு வாங்கிடலாம். எனக்கு சொல்வதைச் செய்யிறவன்தான் தேவை'' ஆனால் காசுக்கு வாங்க முடியாத, மிரட்டல்களால் பணிய வைக்க முடியாத, ஒரு கா்ம வீரனாய் கேதீஸ் தன்னை ஒரு உதாரணமாய் முன்நிறுத்தி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். இது ஒரு மிகப் பெரிய சவால், எவரும் எட்ட முடியாத ஒரு தனிப் பிரதேசத்தில் ஆயிரம் ஆயிரம் ஆயுததாரிகளைச் சுற்றவர வைத்துக்கொண்டு அவர்களையே கூட முழுமையாய் நம்பாமல் அற்குள்ளும் தலைமறைவாய் மிகப் பாதுகாப்பாய் வாழ்ந்துகொண்டிருக்கும் உலகின் வலிமைவாய்ந்த அமைப்பொன்றின் தலைவர், தனது கையாட்களை அனுப்பி சாதாரணமாக வீட்டில் வசித்துக்கொண்டு, அழைப்பு மணியை அழுத்தும் எவருக்கும் தானே வந்து கதவைத் திறந்து ''யூ ஆர் வெல் கம் '' என்று கைகுலுக்கி உள்ளே அழைத்துச் செல்லும் ஒரு கனவானைச் சுட்டுக் கொலை செய்வதில் என்ன பெரிய வீரம் இருக்கிறது? ஆக, கேதீஸின் கருத்துக்களைத் தன்னால் கருத்துரீதியாக எதிர்கொள்ள முடியாது போய்விட்ட தோல்விக்கான அப்பட்டமான ஒப்புதலாகவன்றி இது எவ்வாறு அர்த்தப்பட முடியும்?

கேதீஸின் பாத்திரம் வெறும் இயக்க அரசியலுக்குள்ளோ, அல்லது தனியே அறிவியல் தளத்தினுள்ளோ மட்டுப்படுத்தப் பட்டதாய் இருக்கவில்லை. அது அவர் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்ட வரலாற்றுக் கடமைகளுக்கான பாத்திரமாகவே அமைந்திருந்தது.

கேதீஸ் ஒரு தீட்சண்யம் வாய்ந்த அறிவாளி! அந்த அறிவின் வீச்சு அவர் ஏற்றிருந்த போராட்ட அரசியலால் முடக்கப்படவும் இல்லை. அதேவேளை அவரது அறிவியல் நிபுணத்துவ மேதமை அவரைப் போராட்ட அரசியலிலிருந்து பிரித்து வைக்கவும் இல்லை. அதனால் அவர் பல அறிவாளிகள் செய்யத் தவறிய வரலாற்றுக் கடமையைத் தன் மனசாட்சியின் பால் நின்று ஆற்றிய அரிய மனிதர்களில் ஒருவராகிறார்.

தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணாமித்த காலகட்டத்தில் எமது சமூகத்தின் பெரும்பாலான அறிவியற் குழாம் அதிலிருந்து எட்ட விலகி நின்றுகொண்டதே உண்மை. ஒருபுறம் அது தன் அறிவியல் தகமைக்கான அந்தஸ்துக்களையும் வாய்ப்பு வசதிகளையும் இழந்துகொள்ளத் தயாராக இருக்கவில்லை. மறுபுறம் இப் போராட்டத்தின் கடுமையையும் ஆபத்தும் நிறைந்த பயணத்தில் நடைபோடும் துணிவும் அதற்கு இருக்கவில்லை.

ஆனால் அந்தக் காலத்திலேயே தான் அன்று இத்தகைய பாத்திரத்தைத்தான் வகிக்க வேண்டுமென்று துணிந்து முடிவெடுத்து, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் உணர்வுபூர்வமாக இணைந்துகொண்டவர் கேதீஸ். சமூகத்தின் மிக உயர்ந்த மேட்டுக்குடியில் பிறந்து, அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் பயின்று, நிதி நிறுவனமொன்றின் நிர்வாகப் பணிப்பாளர் பதவியுட்பட பல உயர் பதவிகள் வகித்துவந்த அவருக்கு அப்படி எந்த நிர்ப்பந்தமோ, அவசியமோ இருக்கவில்லை. அவரது தந்தையார் லோகநாதன் இலங்கை வங்கியின் முதலாவது அத்தியேடசகரும் உலக வங்கியின் ஆலோசகருமான புகழ்பெற்ற செல்வாக்குமிக்க மனிதர். ஆனால் கேதீஸ் இத்தனை சௌகரியங்களையும் ஒதுக்கிவிட்டு தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக தன் அறிவையும் ஆற்றலையும் நேரத்தையும் -ஏன் வாழ்க்கையையுமே வழங்கியவர். அவர் வெறும் இன உணர்வினாலன்றி அரசியல் ரீதியாக தெளிவாக சிந்தித்து அன்றைய காலகட்டத்தின் தனது வரலாற்றுக் கடமையாக கருதியே இம் முடிவை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை இவரது சிந்தனையானது வெறும் இன விடுதலை என்ற வட்டத்துடன் குறுகிக் கொள்ளாது, ஒட்டுமொத்தமான சமூக மாற்றத்தை முன்னிறுத்தியதாகவும், குருட்டுத்தனமான இனவெறியை நிராகரித்ததுமான ஓர் அர்த்தபூர்வமான தீர்வை நோக்கியதாகவே அமைந்திருந்தது. இதற்கு அமைவான தெரிவு ஒன்றையே அவர் மேற்கொண்டிருந்தார்.

அவர் விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றிய காலத்தில் தனக்கான எந்தப் பிரத்தியேகமான வசதிகளையும் அவர் கோரியதில்லை. அவரின் அன்றைய அரசியற் பங்களிப்பு பாரியது. உலக முற்போக்கு சக்திகள் மத்தியில் உறவை வளர்ப்பதிலும், சர்வதேச அரங்கிலும் இந்திய அரசியற் களத்திலும் தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயங்களையும், குறிக்கோள்களையும் தெளிவு படுத்துவதிலும், இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு பேச்சுவார்த்தைகளை ராஜதந்திர மட்டத்தில் மேற்கொள்வதிலும் குறிப்பாக திம்பு பேச்சுவார்த்தைகளில் தமிழ்ப்பேசும் மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட திம்புக் கோட்பாடுகளை வரைவு செய்வதிலும் அப்பேச்சுவார்த்தைளை நெறிப்படுத்துவதிலும் துல்லியமான பங்காற்றியிருந்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் சற்று ஓய்வு பெற்று நோர்வேயில் தனது புலமைக் கல்வியை முடித்துக்கொண்டு, சிலகாலம் அங்கு பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றியபின் மீண்டும்

இலங்கை வந்து தனது கட்சிப்பணியை ஆற்ற முன்வந்தார். இக் காலத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் வடக்குக் கிழக்கில் மாகாணசபை ஆட்சி ஏற்பட்டு அதில் அவரது கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோதும், அவரது கட்சி பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களை வகித்திருந்த போதும், அவரோ இத்தகைய எந்தவித அரசியற் பதவிகளையும் வகிக்க விரும்பவில்லை.

அவரது கட்சியின் செயலாளர் நாயகம் பத்மநாபாவின் மறைவுக்குப் பின் அக்கட்சிக்குள் ஏற்பட்ட உள்ளியக்க முரண்பாடுகளுக்கு மத்தியில் தலைதூக்கிய சில போக்குகள் அவரது அரசியல் நேர்மைக்கும் தெளிவுக்கும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக உணர்ந்த நிலையில் அவர் தன்னை இயக்க அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டார்.

ஆனாலும் அவர் தன் சமூகப் பங்களிப்பை நிறுத்திக்கொள்ளவோ, தனது சொந்த வாழ்க்கையை மட்டும் பார்த்துக்கொள்ளவோ விளையவில்லை. மாறாக அவர் சமூக விஞ்ஞானக் கழகம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்ற அரசு சார்பற்ற அமைப்புகளில் தன் புலமையைப் பயன்படுத்தி பல காத்திரமான சமூக ஆய்வுகள், கருத்தரங்குகள் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொண்டார். அத்துடன் சண்டே எக்ஸ்பிரஸ் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவும் சிலகாலம் செயலாற்றினார். சத்தியா என்ற பெயரில் பல அரசியற் கட்டுரைகளை எழுதிவந்தார். தனது நேரடி அனுபவத்தையும் அரசியல் அறிவையும் உள்ளடக்கி இலங்கைப் இனப்பிரச்சினை பற்றிய நூல்களை எழுதினார். லொஸ்ட் ஒப்பசுனிட்டீஸ் (இழந்துவிட்ட சந்தர்ப்பங்கள்) என்ற இவரது நூல் மிகக் காத்திரமான ஒரு வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

இறுதிக் காலங்களில் அவர் சமாதானச் செயலகத்தில் பிரதிப் பணிப்பாளாராகச் செயலாற்றி, ஒரு சாத்தியமான அரசியற் தீர்வை வரைவு செய்வதற்கு தன்னாலான முயற்சியொன்றையும் மேற்கொண்டார். ஆனால் அதற்கான ஆரம்பப் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்த வேளையில் அவர் படுகொலை செய்யப்பட்டுவிட்டார்.

இந்த இழப்பு உண்மையில் யாருக்கு? கேதீஸைப் பொறுத்தவரை யாவரும் ஒருநாள் மரணிப்பதைப்போல அவரும் மரணத்தை அடைந்தார். இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டு வேதனை அனுபவித்து இறக்கும் ஒருவரின் இறப்பைவிட இந்த இறப்பு அவரைப் பொறுத்தவரையில் இலகுவானதாக்கூட இருக்கலாம். ஆனால் அவர் தான் வீட்டு வாசலில் கொல்லப்படக்கூடாது என்று தன் நெருங்கிய நண்பர்களிடம் ஆதங்கப்பட்டிருந்தார். அதுகூட தன் மரணத்தைக் கண்ணுற்று தன் அன்புக்குரியவர்கள் நிர்க்கதியாக ஏங்கி நின்றுவிடக்கூடாதே என்பதற்காகத்தான். அதற்கான தயவுகூட இக் கொலைஞர் கூட்டத்திற்கு இருக்கவில்லை. இச் சமுதாயத்துக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்ததற்குப் பரிசாக அவரது உயிர் அவரது வீட்டு வாசலில் வைத்தே பறிக்கப்பட்டு அவரது பெறுமதிமிக்க சேவைக்கான நன்றி அறிதல் மிக நல்லவிதமாகத்தான் செலுத்தப்பட்டுள்ளது! இதற்காக வெட்கப்படக்கூட எம் சமூகத்துக்கு உணர்வில்லை. பரவாயில்லை. கேதீசுக்கு இது ஒருவகையில் விடுதலைதான்!

ஆனல் நாம் ஒரு கேதீஸை இழந்துவிட்டோம்! இந்த உண்மை புரிகிறதா? கேதீசுடன் ஒரு பாரிய வரலாற்றை அடியோடு இழந்துவிட்டோம். ஒரு அனுபவம் வாய்ந்த, அறிவார்ந்த, அர்ப்பணம் மிக்க மேதையின் வழிகாட்டலை இழந்துவிட்டோம். அவரன்றி இன்னொருவரால் அதை ஈடுசெய்ய முடியாத நிலையில் அவரை நாம் இழந்துவிட்டோம். எம் இழப்பின் தார்ப்பரியம் புரிகிறதா?

ஆனால் இதை யார் இன்று உணரப்போகிறார்கள்? அவரின் உணர்வார்ந்த வரலாற்றுப் பங்களிப்பை எமது சமூகம் எந்த அளவு கௌரவிக்கப் போகிறது? குறைந்த பட்சம் அதை எடைபோடக்கூடத் தெரியாத நிலைக்குச் சமூகம் தள்ளப்பட்டிருப்பதே பரிதாபகரமான உண்மை. அதையும்விட அது ஒரு தொடர்ச்சியான விஷப் பிரச்சாரப் போதைக்குள் மூழ்கடிக்கப்பட்டு உழன்றுகொண்டிருக்கிறது. பைத்தியம் பீடிக்கப்பட்ட ஒரு தொழுநோய்க்காரன் தன் செயலையே உணராதவனாய் தன் உறுப்புக்களைத் தானே கடித்துச் சுவைத்து உண்டபடி, தான் ஏதோ ஆரோக்கியம் பெற்று வளர்வதாய் எண்ணிக்கொள்வதைப்போல், சுய அழிவையே வளர்ச்சியென எண்ணி மயங்கும் போதைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது சமூகம். அதற்கு கேதீஸ் யார், அவரின் பெறுமதி என்ன என்பதையெல்லாம் யார் இருந்து சொல்லிக்கொடுக்க முடியும்?

கேதீஸ் போன்ற அற்புதமான மனிதர்களையெல்லாம் தன் இராட்சதச் சில்லினால் நசித்து அழித்தபடி செல்லும் இந்த அழிவுப் பேரியந்திரம் எதை மிச்சம் வைக்கப் போகிறது? இதனால் எமது சமூகம் ஒருபடி முன்னேறும், விடுதலை நெருங்கும் என்று எண்ணுபவனைவிட அடி முட்டாள் யார் இருக்க முடியும்? ஆனால் எம் மக்கள் அனைவரும் அப்படியான ஒரு கூட்டமாக ஆக்கப்படுவதைத்தானே இந்தச் சக்திகள் விரும்புகின்றன. அறிஞர்கள் என்று கூறிக்கொள்ளும் பலர் இந்தப் பயங்கரவாதத்தின் அடிவருடிகளாக மாறிச் செல்கின்ற போக்கினை நோக்குக்கும்போது சாமானியர்கள் மௌனிகளாகிவிடுவதில் அதியசப்படுவதற்கு எதுவுமில்லை. இவ் விடத்தில்தான் கேதீஸ் போன்றவர்களின் துணிச்சல் மிக்க பாத்திரம் மலைக்க வைக்கும் ஒரு அசாத்திய வீரமாக மிளிர்கிறது.

கேதீஸ்! நாம் உம் முன் தலை வணங்குகிறோம்.

சிந்தனா யாசகன்

நன்றி : **www.Thenee.com**